ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1972/31 - 2016 ජුනි මස 22 වැනි බදාදා - 2016.06.22

*1972/31 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைகள் சட்டம்**

*போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சராகிய நான், 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 117 (2) (கெ) ஆம் பிரிவின் கீழ், எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அமுல்படுத்தும் ஒழுங்குவிதிகள்.*

*நிமல் சிறிபால டி. சில்வா,*
*போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்.*

*போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு,*
*செத்சிறிபாய - II ஆம் கட்டம்,*
*பத்தரமுல்லை,*
*2016, யூன் 20.*

ஒழுங்குவிதிகள்

*1.* இந்த ஒழுங்குவிதிகள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (BIA), மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (MRIA) மற்றும் இரத்மலானை விமான நிலையம் (RMA) தவிர்ந்த இலங்கைக்குள்ளே அமைந்துள்ள ஏனைய விமான நிலையங்கள் அனைத்துக்கும் பயன்படுத்துவதற்கு பொருந்தும் கட்டணங்களாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*2.* இந்த ஒழுங்குவிதிகள் மூலம், 2002, நவெம்பர் மாதம் 12 ஆந் திகதிய 1262/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.

*3.* இலங்கை ஆயுதப் படைகளால் இயக்கப்படும் விமானங்களைத் தவிர்ந்த ஏனைய அனைத்து விமானங்களுக்கும் தேவையேற்படும் போது, இங்கு பின்வரும் 6 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

*4.* இங்கு மேற்குறிப்பிட்ட 3 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கருதாது, ஆயுதப்படைகளினால் இயக்கப்படும் விமானங்கள் மற்றும் இலங்கை அரசு பயன்படுத்தும் விமானங்கள் ஈடுபடுத்தப்படுவது, பயணிகளைக் கொண்டு செல்வதற்காக மற்றும் சரக்குகளின் வாடகைக்காக அல்லது ஏதும் குறித்த வெகுமதிக்காக அல்லது போக்குவரத்து செய்வதற்கு ஏற்படும் சந்தர்ப்பங்களில் பொருந்தும் வகையில் 6 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

5. இந்த கட்டணங்கள் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைகள் சட்டத்தின் ஒழுங்குவதிகளின் கீழ் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட, விமானத்தள சேவைகளை வழங்குகின்ற சேவை வழங்குநர்களுக்கு சேலுத்துதல் வேண்டும்.

6. பொருந்தும் கட்டணங்கள்

1. 1 இறங்குமிட கட்டணங்கள் :

| விமானத்தின் எடை | புதிய தரையிறக்க கட்டணங்கள் |
|---|---|
| கி. கி. 10,000 வரை | கி. கி. 1000 இற்கு 200 ரூபா |
| கி. கி. 10,000 இலிருந்து கி. கி 20,000 வரை | 2000 ரூபா + கி. கி. 10,000ஐ விஞ்சிய அனைத்து கி. கி.1000 இற்காக 300 ரூபா |
| கி. கி. 20,000 இற்கு மேற்பட்ட | 5,000 ரூபா + கி. கி. 20,000ஐ விஞ்சிய அனைத்து கி. கி.1000 இற்காக 500 ரூபா |

* அனைத்து பயிற்சி விமானங்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட கட்டண அளவுகளிலிருந்து நூற்றுக்கு 50 % அறவிடுதல் வேண்டும்.

6. 2 தங்குமிட கட்டணங்கள் :

சகல 24 மணித்தியால முழுவதுமான காலப்பகுதிக்கும் மற்றும் அதன் ஒரு பகுதிக்காக தரையிறங்கும் கட்டணமாக நூற்றுக்கு ஐம்பது (50 % ) வீதப்படி.

6.3 தரிப்பிட கட்டணங்கள் :

தரித்திருக்கும் முதல் மூன்று மணித்தியாலங்கள் (03) விஞ்சிய சகல மூன்று மணித்தியால (03) காலப்பகுதிக்காக மற்றும் அதன் ஒரு பகுதிக்காக தரையிறக்க கட்டணத்திலிருந்து நூற்றுக்கு பத்து (10 % ) வீதப்படி.

**குறிப்பு** :

(i) தரித்திருக்கும் கால எல்லையை கணக்கிடுவதற்காக, எடுக்கும் உண்மையான நேரத்தை கருதாது தரித்திருக்கும் கொட்டகையிலிருந்து விமானம் ஓடி எழுவதற்குரிய புள்ளி வரை விமானம் நிற்குமிட காலமாக 15 நிமிடங்கள் நியம நேரத்தை சேர்த்தல் வேண்டும் ;

(ii) கட்டணங்கள் அறிவிடப்படவேண்டிய தரிப்பிட காலத்தை கணக்கிடுவதற்காக மணித்தியாலயத்தின் ஒரு பகுதி அண்ணளவான மணித்தியாலயத்திற்கு மட்டமாக்கப்பட முடியும். ஒவ்வொன்றும் தரித்திருக்கும் கால எல்லைக்காக அறவிடப்படும் கட்டணங்களின் அளவு அண்ணளவாக ரூபாவிற்கு மட்டமாக்கப்பட முடியும்.

(iii) சரக்குத் தொழிற்பாடுகளுக்கான தரையிறங்கும் கட்டண அளவுகள் பயணிகள் தொழிற்பாடுகளுக்கான கட்டணங்களின் அளவுக்கு சமமானதாகும்.

(iv) அனைத்து சந்தர்ப்பங்களிலும் விமானத்தின் மொத்த எடை கிட்டத்தட்ட 1000 கி. கிமிற்கு கணக்கிடப்படுவதுடன் கட்டண அளவுகள் கிட்டத்தட்ட ரூபாவிற்கு கணக்கிடப்படும்.

6.4 முனையக் கட்டணங்கள் :

அறவிடப்படும் தரையிறக்க கட்டணத்திலிருந்து நூற்றுக்கு ஐந்தாகும் . (5 % )

7- 370

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.